RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 107 | ஏப்ரல்.24 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "தமிழ்நாடு வெல்லும்" வாக்கு செலுத்திய பின் முதல்வர் ஸ்டாலின் பேட்டி

சென்னை: ஏப்.24-

'தமிழ்நாடு வெல்லும்' என தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனது வாக்கினை செலுத்திய பின்னர் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னை மயிலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட எஸ்ஐஇடி கல்லூரியில் உள்ள வாக்குச்சாவடியில் குடும்பத்தினருடன் வருகை தந்து, வாக்கு செலுத்தினார் முதல்வர் ஸ்டாலின். அவருடன் அவரது மனைவி துர்கா ஸ்டாலின், மகனும் துணை முதல்வருமான உதயநிதி, மருமகள் கிருத்திகா, பேரன் இன்பநிதி ஆகியோர் தங்கள் வாக்குகளை செலுத்தினர்.

வாக்கு செலுத்திய பின்னர் முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது: "நான் என்னுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ளேன். அதேபோல் தமிழகத்தின் வாக்காளர்கள் எல்லோரும் தவறாமல் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்ற வேண்டும். தமிழ்நாடு வெல்லும்'' என்றார்.

இந்தத் தேர்தல் தமிழ்நாட்டுக்கும் டெல்லிக்கு இடையிலான தேர்தல் என தமிழகம் முழுவதும் முதல்வர் ஸ்டாலின் தனது பரப்புரையில் தெரிவித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

முதல்வர் எக்ஸ் பதிவு:



"தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தவறாது வாக்களியுங்கள்! 2026 சட்டமன்றத் தேர்தலில் எனது வாக்கினைச் செலுத்திவிட்டேன். தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் அனைவரும் தவறாமல் தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்றிடுங்கள்.

இன்று நீங்கள் அளிக்கப் போவது வாக்கல்ல; தமிழ்நாட்டைக் காக்க நீங்கள் ஏந்தும் கேடயம்! உங்கள் வாக்குதான் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொருவரின் எதிர்காலத்தையும் தீர்மானிக்கும்.

ஜனநாயகம் மதச்சார்பின்மை மாநில உரிமைகள் சமத்துவம் சமூக நீதி ஆகிய அரசியலமைப்பின் உயர்ந்த விழுமியங்களைப் பாதுகாக்கும் வகையில் உங்களின் வாக்கு அமையட்டும்!

தமிழ்நாடு வாக்களிக்கும்; தமிழ்நாடு வெல்லும்! வெல்வோம் ஒன்றாக!'' என முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்துள்ளார்.

"எல்லோரும் தங்கள் வாக்கினை செலுத்த வேண்டும். நான் கடந்த 25 ஆண்டுகளாக வாக்கு செலுத்தி வருகிறேன். எனது மகன் முதல் முறையாக தனது வாக்கினை செலுத்தி உள்ளார்'' என துணை முதல்வர் உதயநிதியின் மனைவி கிருத்திகா தெரிவித்தார்.

## தேர்தல் முடிவு எப்படி இருக்கும்? மதுரையில் மு.க.அழகிரி சூசக பதில்

மதுரை: ஏப்.24-

தேர்தல் முடிவு எப்படியிருக்கும் என்ற நிருபர்களின் கேள்விக்கு, "நான்தான் அன்றைக்கே சொல்லிவிட்டேனே, யார் வேண்டுமென்றாலும், எப்படிவேண்டுமென்றாலும் ஜெயிக்கலாம்'' என்று முன்னாள் மத்திய அமைச்சரும், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் சகோதரருமான மு.க.அழகிரி புதிர்போல் பதில் அளித்தது கவனம் பெற்றுள்ளது.

முன்னாள் மத்திய அமைச்சரும், மறைந்த முதல்வர் கருணாநிதி மகனுமான மு.க.அழகிரி, இன்று டிவிஎஸ் நகரில் உள்ள டிவிஎஸ் பள்ளியில் வாக்களித்தார். அவருடன் அவரது மனைவி காந்தி வந்திருந்தார். வாக்களித்துவிட்டு வாக்குச்சாவடியை விட்டு வெளியே வந்த அழகிரியிடம் செய்தியாளர்கள், கேள்விகளை முன் வைத்தனர்.

வாக்களிப்பது எவ்வளவு முக்கியமான விஷயம் என்ற கேள்விக்கு, ''வாக்களித்த எல்லோரும் என் ஜனநாயக கடமையை நிறைவேற்றினேன் என்று சொல்லப்போகிறார்கள். நானும் அதைத்தான் சொல்கிறேன்.'' என்றார்.

தேர்தல் களம் எப்படி இருக்கிறது என்ற கேள்விக்கு, "தேர்தல் கொஞ்சம் சூடாக இருக்கிறது. வெளியே வெயிலாக, சூடாக இருக்கிறது,'' என்றார். எல்லோரும் அவரது இந்தப் பதிலுக்கு சிரித்தனர்.

தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்கு அவர், ''தெரியவில்லை, நான்தான் அன்றைக்கே சொல்லிவிட்டேனே, யார் வேண்டுமென்றாலும், எப்படி வேண்டுமென்றாலும் ஜெயிக்கலாம் என்று. ஒன்றும் புரியவில்லை. என்னுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றிவிட்டேன். அவ்வளவுதான்,'' என்றார்.

திமுகவில் தன் ஆதரவாளர்களை சேர்த்துக் கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், தன்னை இன்னும் சேர்த்துக் கொள்ளாததால் மு.க.அழகிரி வருத்தத்தில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இதை முக.அழகிரியின் மகள் கயல்விழி, சமீபத்தில் ஒரு பேட்டியில், மிக வெளிப்படையாகவே தெரிவித்தோடு "ராமனுக்கே 14 வருஷம்தான் வனவாசம், எங்க அப்பாவை ஓரங்கட்டி 15 வருஷம் ஆகிவிட்டது'' என தன்னுடைய சித்தப்பா முதல்வர் மு.க.ஸ்டாலின், தன்னுடைய தந்தையை திமுகவில் சேர்த்துக் கொள்ளாதது பற்றி வருத்தமாகக் கூறியது குறிப்பிடத்தக்கது.

## "2 மணி நேரம் கூட வெயிலில் நிற்க முடியாத விஜய் மக்களுக்கு எப்படி பணியாற்ற முடியும்?" : அமைச்சர் ரகுபதி

சென்னை: ஏப்.24-

"2 மணி நேரம்கூட வெயிலில் நிற்க முடியாதவர் விஜய். இவரால் மக்களுக்கு எப்படி பணியாற்ற முடியும்?. எனவே, சுகவாசிகளை மக்கள் ஏற்க மாட்டார்கள்'' என அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, விராலிமலை, அறந்தாங்கி மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய 6 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் 1,683 வாக்குச்சாவடிகளில் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்று வருகிறது. மாவட்டத்தில் 13.09 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர்.

அதில், திருமயம் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளரும், மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை தொகுதிக்கு உட்பட்ட புதுக்கோட்டை கிழக்கு 3ம் வீதியில் உள்ள ராணியார் அரசு உயர்நிலைப் பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார்.




இதேபோல, ஆலங்குடி தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளரும், மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான சிவ.வீ.மெய்யநாதன் தனது சொந்த ஊரான மறமடக்கி அரசுப் பள்ளியில் தனது வாக்கை செலுத்தினார். விராலிமலை தொகுதி அதிமுக வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான சி.விஜயபாஸ்கர், இலுப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் வாக்கை பதிவு செய்தார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியதாவது: தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக செயல்படாமல் ஒரு கட்சியுடன் கூட்டணி வைத்து செயல்பட்டு வருகிறது. தேர்தலில் எத்தனை முனை போட்டியாக இருந்தாலும் களம் திமுக கூட்டணிக்கு சாதகமாக உள்ளது. எஸ்ஐஆர் பணிக்குப் பிறகும் இரட்டைப் பதிவு, இடம் பெயர்ந்தவர்களின் பெயர்கள் பட்டியலில் இருந்ததால் வாக்குப்பதிவு 10 சதவீதம் குறையும். அதேசயம், கடந்த தேர்தலைவிட வாக்குப்பதிவு அதிகரிக்கும்.

இளம் வாக்காளர்களை கவரும் வகையில், அவர்களுக்கான திட்டங்கள் குறித்து விளக்கி பிரச்சாரம் செய்துள்ளோம். நடிகர் எம்ஜிஆர் என்பவர் வேறு. விஜய் என்பவர் வேறு என்பதை வித்தியாசப்படுத்தி இருக்கிறோம். 2 மணி நேரம் கூட வெயிலில் நிற்க முடியாதவர் விஜய்.

இவரால் மக்களுக்கு எப்படி பணியாற்ற முடியும்?. எனவே, சுகவாசிகளை மக்கள் ஏற்க மாட்டார்கள். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி ஏற்கெனவே செல்வாக்கை இழந்து விட்டார். இத்தேர்தலிலும் தோல்வியை சந்திப்பார்,'' என்று அவர் தெரிவித்தார்.



## "ஸ்டாலின் 2வது முறையாக ஆட்சியமைக்கப் போவது உறுதி" : பிரேமலதா நம்பிக்கை

சென்னை: ஏப்.24-

"மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக ஆட்சியமைக்கப் போவது உறுதி. 234 தொகுதிகளில் 200 தொகுதிகளுக்கு மேல் எங்கள் கூட்டணி வெற்றி பெறும்'' என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா தெரிவித்தார்.

சென்னை சாலிகிராமத்தில் உள்ள வாக்குச்சாவடியில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, தனது மகன்களுடன் வாக்களித்தார்.

அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், " தமிழகம் முழுவதும் தேமுதிக 10 இடங்களில் போட்டியிடுகிறது. எங்களின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிச்சயமாக இந்த தேர்தலில் மகத்தான வெற்றி பெறும். மு.க.ஸ்டாலின் இரண்டாவது முறையாக ஆட்சியமைக்கப் போவது உறுதி.

234 தொகுதிகளில் 200 தொகுதிகளுக்கு மேல் எங்கள் கூட்டணி வெற்றி பெறும். மக்கள் பெரிய ஆதரவை எங்களுக்கு வழங்கியுள்ளனர். இங்கே வாக்களித்துவிட்டு நான் போட்டியிடும் விருத்தாச்சலம் தொகுதிக்கு செல்கிறேன். விஜய பிரபாகரனும் அவர் போட்டியிடும் விருதுநகர் தொகுதிக்குச் செல்கிறார்.

முதல் முறை வாக்களிக்கும் அனைத்து இளைஞர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன். எல்லோரும் போய் ஓட்டு போடுங்கள். இதுதான் நமது ஜனநாயகம்.

அந்த ஜனநாயகத்தில் நமக்கு கிடைத்த உரிமையை நிச்சயம் அனைவரும் பயன்படுத்த வேண்டும். யாரும் வாக்களிக்காமல் இருக்க கூடாது. இளைஞர்கள்தான் நமது எதிர்காலம். எனவே உங்கள் மனதுக்கு எது சரியென்று படுகிறதோ அவருக்கு நீங்கள் வாக்களியுங்கள். நமது கடைமையை நினைத்து அனைவரும் நிச்சயமாக வாக்களிக்க வேண்டும்'' என்றார்

## "தமிழகத்தில் நல்லதொரு மாற்றம் வருமென்று முழுமையாக நம்புகிறேன்" : அண்ணாமலை

கோவை: ஏப்.24-

தமிழகத்தில் நல்லதொரு மாற்றம் வருமென்று முழுமையாக நம்புகிறேன் என பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கூறினார்.

பாஜக மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை கோவை பீளமேட்டில் உள்ள தனியார் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது வாக்கினை இன்று காலை செலுத்தினார். அதைத் தொடர்ந்து அண்ணாமலை செய்தியாளரிடம் கூறியதாவது: தமிழகத்தில் காலை முதல் எல்லோரும் தங்களது ஜனநாயக கடமையை சிறப்பான முறையில் செய்து வருகின்றனர். அனைத்து இடங்களில் உள்ள வாக்குச்சாவடிகளில் தமிழக மக்கள் வரிசையில் காத்திருந்த வாக்களித்து வருகின்றனர்.

5 கோடியே 65 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். 29 வயதிற்கு கீழே ஒரு கோடியே 30 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். முதல் முறை வாக்காளர்கள் கிட்டத்தட்ட 17 லட்சம் பேர் உள்ளனர். அனைவரும் நிச்சயம் தங்களது ஜனநாயக கடமை செய்ய வேண்டும் . அனைவரும் வாக்களிக்க வேண்டும். மதியம் வெயில் அதிகமாக இருந்தால் கூட குடையுடன் வந்து பெரியவர்கள் வாக்களிக்கலாம் வாக்குச்சாவடியில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வாக்களிக்காமல் யாரும் வீட்டில் இருந்து விட வேண்டாம்.

தமிழகத்தில் நல்ல ஒரு மாற்றம் வரும் என்று முழுமையாக நான் நம்புகின்றேன். மனசாட்சிப்படி சரியான முறையில் அனைவரும் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும். 84 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என செய்திகள் கேள்விப்பட்டேன். தமிழ்நாடு எப்பொழுதும் அமைதியான மாநிலம். நாம் ஒரே கட்டமாக தான் தொடர்ந்து வாக்குப்பதிவு நடத்தி வருகிறோம்.

மக்கள் எப்போதும் அமைதியாக வந்து வாக்களித்து விட்டு சென்று விடுவார்கள் எதுவும் இருக்காது. அதேசமயம் கடந்த இரண்டு மூன்று நாட்களாக வாக்குக்கு பணம் கொடுத்தல், கரூரில் பார்த்தால் தங்கம் வெள்ளி பொருட்கள் கொடுத்தல், கோவையில் பணம் விநியோகித்தல் என வாக்குப்பதிவுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளது. ஆனால் அதிகம் மீறி இன்று வாக்களிக்க வருபவர்கள் மனசாட்சிப்படி வாக்களிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

சென்னையில் இருந்து தென் தமிழகத்திற்கு செல்லக்கூடிய பேருந்து வசதிகள் குறைவாக இருக்கிறது. சிங்காநல்லூரில் இருந்து வெளியூர் செல்லும் பேருந்துகளும் குறைவாய் இருக்கிறது என்ற புகார் வந்தது. தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் இன்னும் சிறப்பாக செய்திருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. பேருந்துகள் பொதுஅளவுக்கு இருக்கிறது என்று உறுதிப்படுத்தி இருக்க வேண்டும். கட்சி சார்ந்தவர்கள் பொதுவாக இருப்பவர்கள் இளைஞர்கள் கூட பேருந்து வசதி தொடர்பாக புகார் கூறுகின்றனர்.

அனைவரும் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். தேர்தல் ஆணையம் இன்னும் சிறப்பாக தன் பணியை செய்திருக்க வேண்டும் என்று என் தனிப்பட்ட கருத்து வீட்டுக்கு வீடு நடந்து சென்று ஒரு வாக்குக்கு ஐந்தாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். கரூரில் வாக்காளர்களுக்கு தங்க நாணயங்கள் கொடுக்கின்றனர். இவை அனைத்தும் ஒரே நாளில் வரவில்லை. முன்னரே கொண்டு வந்து எங்கோ ஒரு இடத்தில் பதுக்கி வைத்து இதை கொண்டு சென்று இருக்கின்றனர்.

சாதாரண பொதுமக்கள் பணம் எடுத்துச் செல்லும் பொழுது கடும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். பணம் பொருட்களை தேர்தல் ஆணையம் பிடித்துள்ளது என்று கூறினாலும் அதில் அரசியல் பிரமுகர்களின் பொருட்கள் எவ்வளவு. கோவையில் அதிமுக வேட்பாளர் ஆர்ப்பாட்டம் நடத்தக்கூடிய நிலை ஏற்பட்டது. வாக்காளர் வாக்குச்சாவடிக்கு வரும்பொழுது நேர்மையாக நியாயமாக மனசாட்சிப்படி வாக்களிப்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியின் காரணமாக வாக்கு சதவீதம் என்னை பொறுத்தவரை வழக்கமாய் இருப்பது விட இரண்டு பேரும் இரண்டு சேரும் உயரும். இரண்டரை சதவீதம் உயரும். அந்த இரண்டரை சதவீதத்திற்கு மேலே வரும் வாக்குப்பதிவு தான் அதிகமான வாக்குப்பதிவு சதவீதமாக நாம் கணக்கெடுத்துக்கொள்ள வேண்டும். எஸ்.ஐ.ஆர் பணிகள் அனைத்தும் நேர்மையான முறையில் நடந்தது. இந்த தேர்தல் வழக்கமான தேர்தல்களை தாண்டி அடுத்த கட்டத்திற்கு சென்று விட்டது.

வாக்குக்கு பணம் பொருட்கள் தைரியமாக கொடுக்கின்றனர். கோவை புறநகரில் ஒரு ஓட்டுக்கு ஐந்தாயிரம் பணம் கொடுக்கின்றனர். அதையும் தாண்டி நடைபெற்றுள்ளது. இது தேர்தல் ஆணையத்திற்கே ஒரு பாடமாக நான் பார்க்கிறேன். எனவே தேர்தலுக்கு மூன்று மாதத்திற்கு முன்ப தேர்தல் ஆணையம் கட்டுப்பாட்டில் எடுக்க வேண்டிய நிலை உள்ளது.

வங்கி பரிமாற்றங்கள், நிதி பரிமாற்றங்கள் போன்றவற்றை கண்காணிக்க வேண்டிய சூழல் உள்ளது. தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னரே அரசியல்வாதிகள் பதுக்க வேண்டிய பணங்களை மதிக்கின்றனர் . இன்று காலை பார்க்கும் பொழுது பல இடங்களில் திமுக தனது சாஃப்ட் பிரச்சாரத்தை செய்கிறது.

வாக்குச்சாவடியில் இருந்து 100 மீட்டர் எல்லைக்குள் யாரும் எந்த பிரச்சாரத்திலும் ஈடுபடக்கூடாது. ஆனாலும் பல இடங்களில் திமுகவினர் சாஃப்ட் பிரசாரம் செய்கின்றனர். தேர்தல் ஆணையம் இதை கண்காணித்து தீவிரமாக பரிசளித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். திமுக செயலை நாங்கள் கண்டிக்கின்றோம்.

நான் பிரசாரத்தில் பேசியது உறுதியாக நடக்கும். நான் அரசியலுக்கு வந்த பிறகு வெள்ளை சட்டை, பிரவுன் பேண்ட் போடுவது வாடிக்கை. இதை ஜெகன் மோகன், ரெட்டி விஜய் போன்றவர்கள் போடுகின்றனர்.

இதற்கு வேறு எதற்க்கும் தொடர்பு இல்லை. இந்த பக்கம் சேர்க்க வேண்டாம். நான் ஒரே பக்கம் தான் இருக்கிறேன். சரியான பக்கம் நியாயமான பக்கம் மாறுகிறேன் . கண்டிப்பாக இந்த முறை தேர்தல் ஆணையம் இன்னும் சிறப்பாக செய்திருக்க வேண்டும் என்பது எனது கருத்து கடைசியாக இரண்டு மூன்று நாட்கள் விரும்பத்தகாத நிகழ்வுகளை நடத்தியுள்ளனர் குறிப்பாக திமுக நடத்தியுள்ளனர். அதை இன்று பேசி பிரயோஜனமில்லை. மக்கள் இதையெல்லாம் கணக்கில் வைத்துக் கண்டு வாக்களிப்புடன் விரும்புகிறேன்.இவ்வாறு அவர் கூறினார்.



■ சிவகங்கை சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, முன்னாள் அமைச்சர் ராஜகண்ணப்பன் நேற்று சிவகங்கை அரசு மருது பாண்டியர் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் தனது வாக்கை பதிவு செய்தார்.அவர் காலை நேரத்தில் வாக்குச்சாவடிக்கு வந்து, பொதுமக்களுடன் வரிசையில் நின்று ஜனநாயக கடமையை நிறைவேற்றினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து ஜனநாயகப் பொறுப்பை உணர வேண்டும் என்று கூறினார்.

# "தமிழகத்தில் 210 தொகுதிகளில் அதிமுக வெற்றி பெறும்" முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி

கோவை, ஏப்.24-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 210 தொகுதிகளில் வெல்வோம் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் காலை 7 மணி முதல் விறுவிறுப்பாக நடைபெற்று வரும் நிலையில், கோவை தொண்டாமுத்தூர் தொகுதி அதிமுக வேட்பாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணி இன்று தனது தொகுதிக்கு உட்பட்ட சுகுணாபுரம் அரசுப் பள்ளியில் குடும்பத்தினருடன் வந்து வாக்கு செலுத்தினார்.



அதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், "இந்த தேர்தலில் தமிழகம் முழுவதும் அதிமுக கூட்டணி 210 இடங்களில் வெல்லும். கோவை மாவட்டத்தில் உள்ள 10 தொகுதிகள் மற்றும் அவிநாசி தொகுதியையும் சேர்த்து 11 தொகுதிகளில் நாங்கள் வெற்றி பெறுவோம். தமிழகத்தில் ஆட்சி மாற்றம் உறுதியாகி உள்ளது. நீலகிரி, திருப்பூர், கோவையில் அனைத்து தொகுதிகளிலும் வெல்வோம்.அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தலைமையில் மீண்டும் நல்லாட்சி அமையும். மக்கள் அதிமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்று ஆர்வத்துடன் வாக்களிக்கின்றனர்.

கோவையில் தேர்தல் நடத்தும் அதிகாரிகளின் பணிகள் திருப்தியாக இல்லை. கவுண்டம்பாளையத்தில் இன்று காலையில் கூட டோக்கன் கொடுத்துள்ளனர். தெற்குத் தொகுதியில் அம்மன் அர்ச்சுனன் கடுமையாக பாதித்துள்ளார். அவருடன் கலந்து பேசி போராட்டம் குறித்து முடிவெடுப்போம்.

தேர்தல் ஆணையம், போலீஸார் வேகமாக வேலை செய்ய வேண்டும். கோவை அமைதியான மாவட்டம், ஆனால், இன்று வேறு மாதிரியான சூழ்நிலைக்கு கொண்டு செல்லப் பார்க்கின்றனர். இதனை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். நாங்களும் அனுமதிக்க மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

# "தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பது ஜனநாயக துரோகம்" வாக்களித்த பின் சீமான் கருத்து

சென்னை, ஏப்.24-

தேர்தலில் வாக்களிக்காமல் இருப்பது ஜனநாயக துரோகம் ஆகும் என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. சென்னை நீலாங்கரையில் தனது வாக்கினை சீமான் செலுத்தினார். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறியது:



"தேர்தலில் வாக்கு செலுத்தாதவர்களுக்கு என்ன பிரச்சினை என்றவொரு கேள்வி உள்ளது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மீது நம்பிக்கை இல்லையா, இந்த நாட்டின் ஜனநாயக அமைப்பு மீது நம்பிக்கை இல்லையா என்ற கேள்வி எழுகிறது. நூறு சதவீத வாக்கு பதிவாக வேண்டும் என தேர்தல் ஆணையம் சொல்லி வருகிறது.குண்டு வைப்பது, கொலை செய்வது, சொத்து சேர்த்து கணக்கு காட்டாமல் இருப்பது மட்டும் குற்றம் அல்ல. வாக்கு செலுத்தாமல் இருப்பதும் குற்றம்தான். அது ஜனநாயக துரோகம் தான். கற்றவர்கள் தான் மற்றவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.ஒரு வாக்கு செலுத்துவதில் என்ன மாற்றம் என நினைக்கிறார்கள். ஒவ்வொரு வாக்கிலும் இருந்துதான் அந்த மாற்றம் வரும். நாம் எல்லோரும் வாக்கு செலுத்துவது நமது பொறுப்பு, கடமை. அதை தவறாமல் செய்ய வேண்டும் என அன்பாக வேண்டுகிறேன்" என்றார்.

# வாக்குப்பதிவு மையத்துக்கு வந்த காட்டு யானை! மேற்கு வங்க தேர்தல் சுவாரஸ்யம்

கொல்கத்தா, ஏப்.24-

மேற்கு வங்கத்தின் ஜார்கிராமில் அமைக்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு மையத்துக்கு காட்டு யானை ஒன்று காலையிலேயே வந்ததால் அதிகாரிகளும் வாக்காளர்களும் அச்சமடைந்தனர்.

தேர்தலின்போது செல்வாக்குமிக்கவர்கள் வாக்குப்பதிவு மையங்களில் தம் பலத்தைக் காட்ட முயல்வது மேற்கு வங்க அரசியலில் சாதாரணமானதுதான் என்ற போதிலும், இது ஒரு வித்தியாசமான பலப் பிரயோகமாக இருந்தது. வாக்காளர்கள் வாக்களிக்க ஜிதுஷோல் தொடக்கப் பள்ளிக்கு வரத் தொடங்கிய நிலையில், திடீரென ராம்லால் என்ற காட்டு யானை பள்ளிக்குள் நுழைந்தது. மெதுவாக நடந்து சுற்றி வந்த அந்த யானையைப் பார்த்து வாக்குப் பதிவு மையத்தில் இருந்த அதிகாரிகளும் வாக்காளர்களும் அச்சமடைந்தனர்.



வாக்காளர்கள் நின்று கொண்டிருந்த வரிசையைக் கடந்து சென்ற அந்த யானை, அங்கிருந்த வாகனங்களை நோட்டமிட்டுக்கொண்டிருந்தது. இதனால், தேர்தல் பணிகள் சற்று தாமதமாகின. எனினும், லோதாஷூலி சரகத்தில் இருந்து விரைந்து வந்த வனத்துறை அதிகாரிகள், அந்த யானையை மெதுவாக பாதுகாப்பான தூரத்துக்கு அழைத்துச் சென்றனர். இதையடுத்து, வாக்குப்பதிவு மையம் விரைவாக இயல்பு நிலைக்குத் திரும்பியது.

காடுகளை ஒட்டிய பகுதி என்பதால், வனத்துறைக்கு முன்கூட்டியே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் அடிப்படையில், வனத்துறை அதிகாரிகளும் காலை முதலே தயார் நிலையில் இருந்ததால், யானை விரைவாக அப்புறப்படுத்தப்பட்டது. ராம்லால் என்ற பெயர் கொண்ட இந்த யானை அடிக்கடி இப்பகுதிக்குள் வரும் என்றும் கிராம மக்கள் உணவுகளை வழங்கி மகிழ்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இன்று 152 தொகுதிகளுக்கு முதல் கட்டத் தேர்தல் நடைபெற்று வருகிறது. காலை 11 மணி நிலவரப்படி 41.11% சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.

# இந்தியாவிலேயே முதன் முறையாக மைதா மற்றும் கோதுமை மாவு கலக்காத எம்விஎம் கூட்டுப் பெருங்காயத் தூள் அறிமுக விழா

மாதவரம், ஏப்.24-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சியில் உள்ள எம்.வி.எம்.திருமண மஹாலில் பொதுமக்களின் உடல் நலனை கருத்தில் கொண்டு இந்தியாவிலேயே முதன் முறையாக மைதா மற்றும் கோதுமை மாவு கலக்காத கூட்டுப் பெருங்காயத் தூளை எம்விஎம் பெருங்காயம் சந்தையில் அறிமுகப்படுத்தும் விழா சன் இண்டஸ்ட்டீரிஸ் நிர்வாக இயக்குநர் எம்விஎம். ரமேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. சன் இண்டஸ்ட்டீரிஸ் இயக்குநர் ஆர்.கோகுல் அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக சார்ட்டண்ட் அக்கவுண்ட் எஸ்.காமராஜ் கலந்து கொண்டு மைதா மற்றும் கோதுமை மாவு கலக்காத கூட்டுப் பெருங்காயத் தூளை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.இதில் தமிழ்நாடு, ஆந்திரா மாநில விநியோகஸ்தர்கள் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.





மேலும் நிர்வாக இயக்குநர் எம்விஎம். ரமேஷ்குமார் கூறுகையில், 'என்னுடைய தந்தை எம்வி. மாரியப்பன் நாடார் 1968ஆம் ஆண்டு எம்விஎம் பெருங்காயத் தூளை விற்பனைக்கு கொண்டு வந்தார். அதன் பிறகு 1997 முதல் நான் பொறுப்பேற்று பெருங்காயத் தூளை மெருகேற்றி சந்தைக்கு கொண்டு வந்தேன். 2021 முதல் எனது மகன் கோகுல் என்னுடன் இணைந்து இந்தக் காலத்திற்கேற்ற வகையில் சந்தைப்படுத்தி பொதுமக்களிடையே எளிதாக கொண்டு சேர்க்கும் பணியை செய்து வருகின்றார். இன்றைக்கு எல்லோரும் வீட்டுச் சமையலில் மணமும் சுவையும் தான் ரொம்ப முக்கியம், அதுக்குத் தரம் வாய்ந்த பெருங்காயம் அவசியம் தேவைப்படுகிறது. இந்தியாவிலேயே முதல் முறையாக மைதா மற்றும் கோதுமை மாவு கலக்காத பெருங்காயத்தை எம்விஎம் கூட்டுப் பெருங்காயத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். என்று கூறினார்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உற்சாக வாக்குப்பதிவு

## 2093 மையங்களில் பலத்த பாதுகாப்புடன் தொடக்கம்

கிருஷ்ணகிரி, ஏப்.24-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளான கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை, வேப்பனஹள்ளி, ஒசூர் மற்றும் தளி ஆகிய பகுதிகளில் இன்று ஒரே கட்டமாக வாக்குப்பதிவு தொடங்கியது. மாவட்டம் முழுவதும் உள்ள 2093 வாக்குச்சாவடிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மூலம் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

காலை முதலே வாக்குச்சாவடிகளில் பெண்கள், ஆண்கள் என பொதுமக்கள் ஆர்வத்துடன் நீண்ட வரிசையில் நின்று தங்களது வாக்குகளை பதிவு செய்து வருகின்றனர். வாக்காளர்களின் அதிக வருகையால் பல மையங்களில் உற்சாகமான சூழல் காணப்பட்டது.





இந்த தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லக்குமார் குப்புசாமி உள்ளிட்ட மொத்தம் 79 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். தேர்தலை முன்னிட்டு அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக செய்யப்பட்டிருந்ததால் வாக்குப்பதிவு சீராக நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து, கிருஷ்ணகிரி தொகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் செல்லக்குமார் நேரில் பல வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி, நகர திமுக செயலாளர்கள் அஸ்லாம், வேல் மணி, கிழக்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பி.சி. சேகர், தொகுதி பொறுப்பாளர் ஆடிட்டர் வடிவேல், முன்னாள் நகர காங்கிரஸ் தலைவர் முபாரக், இளைஞர் அணி மாநில செயலாளர் விக்னேஷ் உள்ளிட்ட இந்திய கூட்டணி கட்சியினர் பலரும் உடனிருந்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, நீலகிரி மாவட்டம் உதகை ஜோசப் கல்வியியல் கல்லூரி வாக்குச்சாவடி மையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தனது வாக்கினை பதிவு செய்தார்.





■ இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 னையொட்டி இராணிப்பேட்டை நகராட்சி காரை அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளியில் உள்ள வாக்குச்சாவடியில் தன்னுடைய வாக்கினை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்கள்.

# தேனி மாவட்டத்தில் விளையாட்டு விடுதிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு

தேனி, ஏப்.24-

தேனி மாவட்டம் விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வமுள்ள 6ஆம்,7 ஆம்8 ஆம், 9 ஆம் மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ / மாணவிய ர்களுக்கு2026-2027ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விடுதி (Sports Hostel) - முதன்மை நிலை விளையாட்டு மையம் (CEO சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப்படிவம் www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

இணையதள விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து பதிவேற்றம் செய்வதற்கான கடைசி நாள்: 03.05.2026 (ஞாயிறு) அன்று மாலை 6.00 மணி ஆகும். தேர்வுக்கு இணையதள விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் தகவல்களுக்கு மாவட்ட விளையாட்டு அரங்கத்தினை தொடர்பு கொண்டு விபரத்தினை பெற்று கொள்ளலாம். விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ / மாணவியருக்கான மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் வருகின்ற 07.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் ஆண்களுக்கும், 08.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் பெண்களுக்கும் பின்வரம் விபரப்படி நடைபெற இருப்பதால் இணையதளத்தில் விண்ணப்பித்தவர்கள் மட்டும் தவறாது கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளையாட்டு விடுதி (SH) மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள்:1. தடகளம் (மாணவர்கள் - மாணவியர்கள்) 2. கூடைப்பந்து (மாணவர்கள் - மாணவியர்கள்), 3. கால்பந்து (மாணவர்கள் - மாணவியர்கள்), 4.வளைகோல்பந்து (மாணவர்கள் - மாணவியர்கள்), 5.கபாடி (மாணவர்கள் - மாணவியர்கள்), 6.கையுந்துபந்து (மாணவர்கள் - மாணவியர்கள்), 7. கிரிக்கெட் (மாணவர்கள் மட்டும்), 8.கைப்பந்து ((மாணவர்கள் - மாணவியர்கள்) மேற்காணும் விளையாட்டுகள் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெறும்.2026 2027ஆம் கல்வியாண்டில் பயிலவிருக்கும் 6,7,8,9 மற்றும்11 – ஆம் வகுப்பு மாணவ/ மாணவியர்கள் கலந்து கொள்ளலாம்.10 வயது முதல் 17 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்தேர்வு போட்டியில் கலந்து கொள்ள வரும்போது கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் ஆதார் அட்டை நகல்பிறப்புச் சான்றிதழ் நகல்விளையாட்டு சான்றிதழ்கள்பள்ளியில் பயிலுவதற்கான ஏதேனும் ஒரு ஆவணம் (ID Card or Bonafide Certificate) குறிப்பு: மாவட்ட அளவிலான தேர்வில் தெரிவுசெய்யப்பட்டவர்கள் மாநில அளவிலான தேர்வுக்கு தகுதி பெறுவர். அதன் விவரம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் www.sdat.tn.gov.in எனும் அதிகாரபூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.கீழ்காணும் விளையாட்டுக்களுக்கு நேரடியாக மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் 12.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் கீழ்காணும் விபரப்படி நடைபெறும். இணையதள வழிப்பதிவு கடைசி நாள்: 03.05.2026 மாலை 6.00 மணி ஆகும் விளையாட்டுகள்:1.a.வாள் விளையாட்டு (மாணவர்கள் - மாணவியர்கள்), தீ. ஜுடோ (மாணவர்கள் - மாணவியர்கள்), நீ. குத்துச்சண்டை(மாணவர்கள் ) – ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை 2. குத்துச்சண்டை (மாணவிகள்) ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரகம், சென்னை 3. பளுதூக்குதல் (மாணவர்கள் - மாணவியர்கள்) – அன்னை சத்யா விளையாட்டரங்கம், தஞ்சாவூர் 4. வுஷீ (மாணவர்கள்) – அண்ணா விளையாட்டரங்கம், திருச்சி 5. நீச்சல் (மாணவர்கள் - மாணவியர்கள்) – AGB Complex. வேளச்சேரி, சென்னை 6. மல்யுத்தம் (மாணவர்கள் ) – மாவட்ட விளையட்டரங்கம், கடலூர்7.டேக்வாண்டோ (மாணவர்கள் - மாணவியர்கள்) – மாவட்ட விளையாட்டரங்கம் கிருஷ்ணகிரி, 8. மல்லர்கம்பம் ((மாணவர்கள் - மாணவியர்கள்) – மாவட்ட விளையாட்டரங்கம் விழுப்புரம்,9. ஸ்குவாஷ் (மாணவர்கள் மட்டும்) – மாவட்ட விளையாட்டரங்கம், தூத்துக்குடி முதன்மை நிலை விளையாட்டு மையம் சேர்க்கைக்கான மாணவ, மாணவியர் சேர்க்கை (CEO ) – (6th , 7th ,8th std) – Direct State level Selectionகீழ்காணும் விளையாட்டுக்களுக்கு நேரடியாக மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள் 06.05.2026 அன்று காலை 7.00 மணியளவில் கீழ்காணும் விபரப்படி நடைபெறும். இணையதள வழிப்பதிவு கடைசி நாள்: 03.05.2026 மாலை 6.00 மணி ஆகும்2026 2027ஆம் கல்வியாண்டில் பயிலவிருக்கும் 6,7,8– ஆம் வகுப்பு மாணவ/ மாணவியர்கள் கலந்து கொள்ளலாம்.10 வயது முதல் 14 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்தேர்வு போட்டியில் கலந்து கொள்ள வரும்போது கீழ்க்கண்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஆதார் அட்டை நகல்பிறப்புச் சான்றிதழ் நகல்விளையாட்டு சான்றிதழ்கள் பள்ளியில் பயிலுவதற்கான ஏதேனும் ஒரு ஆவணம் (ID Card or Bonafide Certificate)விளையாட்டுகள்: டென்னிஸ் (மாணவியர்கள்) – நுங்கம்பாக்கம், விளையாட்டரங்கம், சென்னை ஜிம்னாஸ்டிக்ஸ் (மாணவ - மாணவியர்கள்) – AGB நீச்சல் குள வளாகம், வேளச்சேரி,சென்னை வில்வித்தை (மாணவ - மாணவியர்கள்), 4 .சைக்கிளிங் (மாணவ - மாணவியர்கள்), 5 . இறகுபந்து (மாணவ - மாணவியர்கள்), 6.கனோயிங் மற்றும் கையாக்கிங் (மாணவர்கள்) 7.மேசைபந்து ((மாணவ - மாணவியர்கள்) – தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம், மேலக்காட்டையூர் , செங்கல்பட்டு (TN-PESU)மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் மாவட்ட விளையாட்டு அரங்கம் தேனியில் நடைபெறும். விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவ, மாணவியர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்டஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தெரிவித்துள்ளார்.





■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026யை முன்னிட்டு, வாக்குப்பதிவு நாளான 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் வாக்குப்பதிவு நடைபெற்றுவருவதைத்தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்து வெப்காஸ்டிங்/சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



■ கிருஷ்ணகிரி வெங்கடேஸ்வரா ஜுவல்லரி உரிமையாளர் ரமேஷ், ஜனநாயக கடமையாற்ற தனது வாக்கினை குடும்பத்தினருடன் கிருஷ்ணகிரியில் பதிவு செய்தார்.

# பிற்பகல் 1 மணி நிலவரம்: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 56.81% வாக்குப் பதிவு

சென்னை, ஏப்.24-

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு இன்று காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது. மக்கள் ஆர்வத்துடன் வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர். பிற்பகல் 1 மணி நிலவரப்படி 56.81% சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக திருப்பூர் மாவட்டத்தில் 62.97% வாக்குகள் பதிவாகியுள்ளன. குறைந்தபட்சமாக நீலகிரி மாவட்டத்தில் 50.42% வாக்குகள் பதிவாகியுள்ளன.

சென்னையில் பிற்பகல் 1 மணி நிலவரப்படி 54.58% வாக்குகள் பதிவாகியுள்ளன. இவற்றில் தொகுதி வாரியாகப் பார்த்தால் சென்னை விருகம்பாக்கத்தில் அதிகபட்சமாக 59.30% வாக்குகளும், குறைந்தபட்சமாக திருவிக நகரில் 48.74% வாக்குகளும் பதிவாகியுள்ளன.

பிரபலங்கள் வாக்களிப்பு: வாக்குச்சாவடிக்கு வழக்கம் போல் காலையிலேயே வந்த நடிகர் அஜித் குமார் திருவான்மியூர் வாக்குச் சாவடியில் முதல் நபராக வாக்களித்துச் சென்றார்.



தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி, சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதிக்கு உட்பட்ட சிலுவம்பாளையம் தொகுதியில் குடும்பத்துடன் வந்து மக்களோடு மக்களாக வரிசையில் காத்திருந்து வாக்களித்தார்.

சென்னையில் தவெக தலைவர் விஜய், நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த், அதிமுக முன்னாள் அமைச்சர் டி.ஜெயக்குமார், பாஜக மூத்த தலைவரும் மயிலாப்பூர் தொகுதி வேட்பாளருமான தமிழிசை சவுந்தர்ராஜன், பாஜக மாநில துணைத் தலைவர் குஷ்பு அவரது கணவரும் மதுரை மத்திய தொகுதி வேட்பாளருமான சுந்தர்.சி, நடிகர் ரஜினி காந்த், நடிகர் சிவகார்த்திகேயன், இயக்குநர் மணிரத்னம், நடிகர்கள் சிவக்குமார், ஜீவா, நடிகை த்ரிஷா, நடிகர் சூர்யா அவரது மனைவி ஜோதிகா எனப் பல்வேறு பிரபலங்களும் வாக்களித்தனர்.

களத்தில் 4,023 வேட்பாளர்கள் : தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக இன்று நடைபெறுகிறது. 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் 14.59 லட்சம் பேர் முதல் முறை வாக்காளர்கள்.

தமிழகம் முழுவதும் 249 மாதிரி வாக்குச்சாவடிகள், 325 அனைத்து மகளிர் வாக்குச்சாவடிகள், 71 மாற்றுத் திறனாளிகள் பணியாற்றும் வாக்குச்சாவடிகள், 79 இளம் பணியாளர்கள் பணியாற்றும் வாக்குச்சாவடிகள் என மொத்தம் 33,211 இடங்களில் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

5,949 வாக்குச் சாவடிகள் பதற்றமானவை என்று அடையாளம் காணப்பட்டுள்ளன. இங்கு நுண்பார்வையாளர்கள், துப்பாக்கி ஏந்திய போலீஸார் அல்லது துணை ராணுவப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு பணியில் துப்பாக்கி ஏந்திய 300 கம்பெனி துணை ராணுவப் படையினர் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் 24 மணி நேரமும் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் 83,875 காவல் துறை பணியாளர்கள், 40,427 காவல் துறை அல்லாத முன்னாள் ராணுவத்தினர் உள்ளிட்ட பணியாளர்களும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மதியம் மணி நிலவரப்படி 56.81% சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக திருப்பூர் மாவட்டத்தில் 62.97% வாக்குகள் பதிவாகியுள்ளன. குறைந்தபட்சமாக நீலகிரி மாவட்டத்தில் 50.42% வாக்குகள் பதிவாகியுள்ளன



■ 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் சேலம் ரோட்டில் அமைந்துள்ள அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் முதல் தலைமுறை வாக்காளர்களான அக்கா, தங்கைகள் விஷாலினி, லய வர்ஷினி தங்களது முதல் வாக்கினை பதிவு செய்தனர்.



■ 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதுமண தம்பதிகள் திலீப் குமார் சிநேக பிரியா தங்களது வாக்கினை பதிவு செய்தனர்.



■ அதிமுக துணை பொதுச்செயலாளரும், வேப்பனப்பள்ளி தொகுதி வேட்பாளர் கே.பி. முனுசாமிகிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம், ஜின்னா ரோடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் தனது வாக்கினை செலுத்தினார்.



■ நீலகிரி மாவட்டம் குன்னூர் பெட்டட்டி பகுதியில் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் தனது வாக்கினை பதிவு செய்தார்



■ கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர்,மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிபையனபள்ளி வாக்குச்சாவடி மையத்தில் குடும்பத்துடன் தனது வாக்கினை செலுத்தினார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதி பர்கூர் தொகுதி திமுக வேட்பாளர் மதியழகன் ஆம்பள்ளிஅரசினர் உயர்நிலைப் பள்ளியில் குடும்பத்துடன் தனது வாக்கினை பதிவு செய்தார்.



# பொன்னேரி வேலம்மாள் வித்யாலயா பள்ளி மாணவன் புதிய உலக சாதனை

மாதவரம், ஏப்.24-

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் இயங்கிவரும் வேலம்மாள் வித்யாலயா பள்ளியில் பயிலும் ஆறாம் வகுப்பு மாணவன் பி.தர்ஷன் 25 மீட்டர் நீச்சல் குளத்தில் தொடந்து நான்கு மணி நேரம் நீச்சல் புரிந்து புதிய உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த சாதனை கலாம் வேர்ல்டு அவார்டு நிறுவனம், வேலம்மாள் பள்ளி நிர்வாகம் , பயிற்சியாளர் விஜய், பள்ளி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நேரடி பார்வையில் இந்த புதிய உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.பின்னர் கலாம் வேர்ல்டு அவார்டு நிறுவனத்தால் 25 மீட்டர் நீச்சல் குளத்தில் நான்கு மணி நேரம் நீச்சல் புரிந்து புதிய உலக சாதனை படைத்த மாணவன் பி.தர்ஷனுக்கு புதிய உலக சாதனையாக அங்கீகரித்து பதக்கம் மற்றும் சான்றிதழை வழங்கி பாராட்டி வாழ்த்தினர். இதில் பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# மேற்கு வங்கம்: முற்பகல் 11 மணி நிலவரப்படி 41.11% வாக்குகள் பதிவு

கொல்கத்தா, ஏப்.24-

மேற்கு வங்கத்தில் இன்று முதல் கட்டத் தேர்தல் நடைபெற்று வருகிறது. 152 தொகுதிகளுக்கு நடைபெறும் இத்தேர்தலில் முற்பகல் 11 மணி நிலவரப்படி 41.11% சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன.மேற்கு வங்கத்தில் மொத்தம் 294 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. இவற்றுக்கு இன்றும், ஏப்ரல் 29ம் தேதியும் இரு கட்டங்களாக தேர்தல் நடக்கின்றன. முதல்கட்டத்தில் 152 தொகுதிகளுக்கு தற்போது வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

இதில், மொத்தம் 1,478 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 3.60 கோடி பேர் வாக்குரிமை பெற்று உள்ளனர். மத்திய பாதுகாப்புப் படைகளை சேர்ந்த 2.4 லட்சம் வீரர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டு உள்ளனர். காலை 11 மணி நிலவரப்படி 41.11% வாக்குகள் பதிவாகி உள்ளன.ஒரு சில தொகுதிகளில் பதற்றம் நிலவினாலும், பொதுவாக வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற்று வருகிறது. அதிகாலை முதலே மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து தங்கள் ஜனநாயகக் கடமைகளை ஆற்றி வருகிறார்கள்.



பெர்ஹாம்பூர் சட்டப்பேரவைத் தொகுதி வேட்பாளரும் காங்கிரஸ் மூத்த தலைவருமான ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, லிபிகா நினைவு பெண்கள் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடியில் தனது வாக்கினை செலுத்தினார்.

பாஜக மூத்த தலைவரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான சுவேந்து அதிகாரி, "நந்திகிராம் மற்றும் பபானிபூர் தொகுதியில் நிலைமை எவ்வாறு உள்ளது என்பது குறித்து நேரில் ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுவேந்து அதிகாரி, சாமானிய மக்கள் அமைதியையே விரும்புகிறார்கள். அமைதியைக் குலைக்க முனையும் எவரையும் நாங்கள் விரட்டியடிப்போம்" என தெரிவித்தார்.தேர்தலுக்கு முதல் நாளான நேற்று இரவு 8 மணி அளவில் முர்ஷிதாபாத்தில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது. இதில், பெண் ஒருவர் காயமடைந்தார். இந்த சம்பவத்தை நேரில் பார்த்த பெண்மணி ஒருவர் கூறும்போது, "இந்த சம்பவம் இரவு 8 மணி முதல் 8.30 மணிக்குள் நடந்தது. இந்த சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார். பெட்ரோல் குண்டு வீச்சில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பது குறித்து எங்களால் உறுதியாகக் கூற முடியாது. நாங்கள் மிகுந்த அச்சத்தில் உள்ளோம். எந்த நேரத்திலும் மற்றொரு அசம்பாவிதம் நடக்கலாம். அரசியல் தலைவர்கள் இங்கு வந்தனர். அதன் காரணமாகவே இதுபோன்ற சம்பவம் மீண்டும் நிகழ வாய்ப்பு ஏற்பட்டுள்ளது" என தெரிவித்தார். முர்ஷிதாபாத் பெட்ரோல் குண்டு வீச்சி சம்பவம் குறித்துப் பேசிய பாஜக தலைவர் திலீப் கோஷ், "முர்ஷிதாபாத் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மாவட்டம். அங்கு ஒவ்வொரு விஷயத்திலும் முறைகேடுகள் மலிந்துள்ளன. நாட்டில் எத்தகைய நிகழ்வுகள் நடந்தாலும் அவை அனைத்தும் அங்கும் எதிரொலிக்கும்.குடியுரிமை திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோதும், வக்பு வாரிய மசோதா நிறைவேற்றப்பட்டபோதும் அங்கு கலவரங்கள் ஏற்பட்டன. எங்கள் கட்சி அலுவலகமும் கோயிலும் எரிக்கப்பட்டன. வங்கதேசத்தில் இருந்து பலர் இங்கு ஊடுருவியுள்ளனர். அவர்கள் இங்கு வந்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொண்டு அமைதியைக் குலைக்கும் செயல்களில் ஈடுபடுகின்றனர். ஆட்சி மாற்றம் நிகழும்போது அனைத்தும் முழுமையாக மாறிவிடும்" என தெரிவித்தார்.

# திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் நேற்று தனது வாக்கினை பதிவு செய்தார்



சிவகங்கை, ஏப்.24-
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள சங்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் திமுக வேட்பாளர் தமிழரசி ரவிக்குமார் நேற்று தனது வாக்கினை பதிவு செய்தார்.வாக்குப்பதிவிற்காக காலை முதலே வாக்குச்சாவடிக்கு வந்த அவர், பொதுமக்களுடன் வரிசையில் நின்று ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "மக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

தமிழரசி ரவிக்குமார் கடந்த மானாமதுரை சட்டமன்றத் தொகுதியின் உறுப்பினராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரின் வாக்களிப்பு அப்பகுதி திமுக நிர்வாகிகள் மற்றும் ஆதரவாளர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது. வாக்குச்சாவடியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், தேர்தல்அதிகாரிகள் மேற்பார்வையில் அமைதியான முறையில் வாக்குப்பதிவு நடைபெற்றது .

# "ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கிறார்கள்" வானதி சீனிவாசன்



கோவை, ஏப.24-
"ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர்" என வானதி சீனிவாசன் தெரிவித்தார்.கோவை, சிவானந்தா காலனி, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் உள்ள காமராஜர் பள்ளியில் பாஜக தேசிய மகளிர் அணி தலைவரும், கோவை வடக்கு தொகுதி வேட்பாளருமான வானதி சீனிவாசன் வாக்களித்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் வானதி சீனிவாசன் பேசுகையில், "2026 சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப் பதிவு விறுவிறுப்பாக நடைபெறுகின்றது. பெண்களும், இளைஞர்களும் அதிகளவு வாக்களித்து வருகின்றனர். தேர்தல் பரபரப்புக்கு மத்தியிலும் திமுக இன்று காலை வரை தங்க நாணயம், வெள்ளி நாணயம் என டிராமா செய்கிறார்.ஆட்சி மாற்றம் தேவை என்பதில் மக்கள் உறுதியாக இருக்கின்றனர். வாக்குறுதிகளை நிறைவேற்ற கோரி 6 மாத காலமாக போராடிக்கொண்டு இருப்பவர்களுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்.

கோவை தெற்கு தொகுதியில் தேர்தல் ஆணையம் கண்ணில் மண்ணை தூவி அராஜாகம் நடந்து கொண்டு இருக்கின்றது. தூங்கிக் கொண்டு இருப்பவர்களை எழுப்பி கோல்ட் காயின், சில்வர் காயின் என ஏமாற்றி வருகின்றனர்.கோவை மாநகராட்சியில் இதே மாதிரி டிராமா செய்தார்கள். இப்போது குப்பை கூட எடுக்க வருவதில்லை. ஆட்சி மாற்றம் நிச்சயமாக வேண்டும். மக்கள் இதை செய்வார்கள்.இளைஞர் சக்தியால் எதுவும் முடியும். இன்ஸ்ட்டா, சமூக ஊடகத்தில் இருப்பது அல்ல அரசியல். 2 மணி நேர சினிமா என்பது வேறு; அரசியல் வேறு. இன்ஸ்டா என்பது ஒரு டூல். முடிவெடுப்பதில் புத்திசாலித்தனம் வேண்டும். நிறைய இடங்களில் வாக்குப் பதிவு இயந்திரம் பழுதடைந்துள்ளது" என்று அவர் கூறினார்.

# "யார் ஆட்சிக்கு வந்தாலும்..." வாக்களித்த பின் நடிகர் சிவக்குமார் வைத்த கோரிக்கை




சென்னை, ஏப்.24-
தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தனது வாக்கினை செலுத்திய பின் நடிகர் சிவக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது யார் ஆட்சிக்கு வந்தாலும் இதை செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை ஒன்றை வைத்தார்.தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் இன்று காலை 7 மணிக்கு தொடங்கியது. இதில் மொத்தம் 5.73 கோடி பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். காலை 9 மணி நிலவரப்படி சுமார் 17.69 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளன. இந்த சூழலில் சினிமா, அரசியல் என பல்வேறு துறை சார்ந்த பிரபலங்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்றி வருகின்றனர். அந்த வகையில் நடிகர் சிவக்குமார் சென்னையில் தனது வாக்கினை செலுத்தினார்."என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் டாஸ்மாக் மதுபானக் கடைகளை உடனடியாக மூட வேண்டும். குடிமக்களை குடிகார மக்களாக ஆக்கியது போதும்.

கோடி கோடியாக சொத்துகளை குவிக்காமல் கடைக்கோடி மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். நான் வைக்கும் இந்த கருத்தை பல ஆண்டுகளாக சொல்லி வருகிறது. இதை செய்வார்களா என்று தெரியாது. ஆனால், செய்தால் சந்தோஷம். கிட்டத்தட்ட 40 சதவீத மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்" என சிவக்குமார் தெரிவித்தார்.


# சபர்மதி ஆற்றில் தங்கம், வெள்ளி நகைகளை தேடும் மக்கள்



அகமதாபாத், ஏப்.24-
குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஓடும் சபர்மதி ஆற்றங்கரையில் சுற்றுலா பயணிகள் பொழுதுபோக்குக்காக கூடுவர். இங்கு மக்கள் ஆற்றில் இறங்கி குளிப்பது வழக்கம். சில பயணிகள் வேண்டுதலுக்காக ஆற்றில் காசுகள், தங்கம், வெள்ளி நகைகளை போடுவதும் வழக்கம்.

சிலர் குளிக்கும்போது தங்க, வெள்ளி ஆபரணங்களை இழப்பதும் உண்டு. சபர்மதி ஆற்றில் உள்ள வஸ்னா தடுப்பணையின் கதவுகளில் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக தடுப்பணை மூடப்பட்டது. இதனால் சபர்மதி ஆற்றில் தண்ணீர் வரத்து குறைந்து வறண்டு காணப்படுகிறது.

இதனால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை சபர்மதி ஆற்றங்கரையில் குவிந்து 'புதையலை' தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒருவருக்கு வெள்ளி நாணயம் கிடைத்ததாக கூறப்படுகிறது. பெரும்பாலும், துருப்பிடித்த இரும்பு பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள்தான் அங்கு கிடைக்கின்றன. ஆனாலும் பலர் கடும் வெயிலை பொருட்படுத்தாமல் தேடி வருகின்றனர்.



■ திருப்பூர் மாவட்டத்தில் 15 வேலம்பாளையம். அஇஅதிமுக தலைவர் மணி 15 வேலம்பாளையம் நகரத்தில். ஒன்றாவது மண்டலம் 15 வார்டுகளைக் கொண்டது. அனைத்து வார்டு தொகுதிகளையும். சென்று ஆராய்ந்து. ஓட்டுக்கள் எத்தனை சதவீதம் விழுந்தது என்று பார்க்க நேரடியாக சென்றார். 15 வேலம்பாளையம் ஆ இ அ திமுக. வி கே பி மணி எல்லா பூத் கமிட்டிகளையும் சென்று ஆராய்ந்து வந்தார்



■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ராஜகம்பீரம் பகுதியில் வாக்குப்பதிவை முன்னிட்டு அஇஅதிமுக அம்மா பேரவை துணைச் செயலாளர் தமிழ்செல்வன் தலைமையில் வாக்காளர்களுக்கு பூத் ஸ்லிப் வழங்கும் பணி நடைபெற்றது. இதில் கட்சியினர் பலர் கலந்து கொண்டு வாக்காளர்களை சந்தித்து பூத் ஸ்லிப்புகளை வழங்கினர். தேர்தல் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

# வாக்களிப்பதை செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் ரீல்ஸ் ஆக வெளியிட்டவர் கைது

திருப்பத்தூர், ஏப்.24-
திருப்பத்தூர் தொகுதியில் விசில் சின்னத்திற்கு வாக்களிப்பதை செல்போனில் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் ரீல்ஸ் ஆக வெளியிட்ட தவெகவைச் சேர்ந்த சக்திவேல் என்பவர் கைது செய்யப்பட்டார். தேர்தல் ஆணையம் எச்சரிக்கை விடுத்திருந்த நிலையில், வாக்குச்சாவடிக்குள் அவர் வீடியோ எடுப்பதை சிசிடிவி மூலம் அதிகாரிகள் உறுதி செய்ததை அடுத்து கைது நடவடிக்கை எடுத்தனர்

# தேசிய அளவிலான மல்யுத்தப் போட்டிக்கு 10ம் வகுப்பு குமரி மாணவன் தேர்வு




கன்னியாகுமரி, ஏப்.24-
கன்னியாகுமரி மாவட்டம் மேலப்பெருவிளையைச் சேர்ந்த சகாய ராஜன் ராதிகா ஆகியோரின் மகன் சஞ்ஜெய் இவர் ஆசாரிப்பள்ளம் பெல்ஃபீல்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறார். சிறுவயதிலிருந்தே விளையாட்டில் ஆர்வம் கொண்ட இவர் மேலப்பெருவிளை மூவேந்தர் பயிற்சிப் பள்ளியில் மல்யுத்த பயிற்சி பெற்று வருகிறார். கடந்த 5 ஆண்டுகளாக மாவட்ட ,மாநில அளவிலான மல்யுத்த போட்டிகளில் பங்கேற்று பல வெற்றிகளைப் பெற்றுள்ளார். மேலும் சிலம்பம், மாரத்தான் ஓட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டு திறமையை வெளிப்படுத்தியுள்ளார். தற்போது 17 வயதுக்குட்பட்டோர் தேசிய அளவிலான மல்யுத்தப் போட்டிக்குத் தேர்ச்சி பெற்று வருகிற 27ஆம் தேதி மகாராஷ்டிராவில் நடைபெற உள்ள தேசிய போட்டியில் பங்கேற்க உள்ளார்.விளையாட்டுத் துறையுடன் அறிவியல் துறையிலும் திறமை வெளிப்படுத்திய சஞ்ஜெய் குமரி அறிவியல் பேரவை நடத்திய 20232024ஆம் ஆண்டுக்கான இளம் விஞ்ஞானி விருதையும் பெற்றுள்ளார்.சஞ்ஜெயின் இந்த சாதனைக்கு மூவேந்தர் பயிற்சிப் பள்ளி மாஸ்டர், கோச், வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.குமரியின் இளம் வீரன்,அறிவியலில் இளம் விஞ்ஞானி சஞ்ஜெய்க்கு வாழ்த்துகள் குவிகின்றன.

# கங்கோத்ரி கோயிலுக்கு செல்ல .பஞ்சகவ்யம் உட்கொள்வது கட்டாயம்

டேராடுன், ஏப்.24-
உத்தராகண்டில் சார் தாம் யாத்திரை தொடங்கியுள்ள நிலையில், இந்து அல்லாதவர்கள் கோயிலுக்குள் நுழைவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. கங்கோத்ரி கோயில் நிர்வாகக் குழுவின் தீர்மானத்தின் படி, இந்து அல்லாதவர்கள் 'பஞ்சகவ்யம்' உட்கொண்டால் மட்டுமே கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.

அவர்கள் சனாதன தர்மத்தை பின்பற்றுகிறார்கள் என்பதை உறுதிப்படுத்த, பசுவின் சிறுநீர் உள்ளிட்ட பொருட்கள் கலந்த பஞ்சகவ்யத்தை உட்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கங்கோத்ரி கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. பசுவின் பால், தயிர், நெய், கோமியம் (பசுவின் சிறுநீர்) மற்றும் பசுவின் சாணம் ஆகிய 5 பொருட்களுடன் கங்கை நீரும் கலந்த கலவையே பஞ்சகவ்யம் ஆகும். இதுகுறித்து யமுனோத்ரி கோயில் நிர்வாக செய்தித் தொடர்பாளர் புருஷோத்தம் உன்னியல் கூறும் போது, "நாங்கள் பல காலங்களாக பஞ்ச கவ்ய பாரம்பரியத்தைப் பின்பற்றுகிறோம். சனாதனத்தின் மீது ஈடுபாடு இல்லாதவர்களின் வருகை அதிகரித்து வருகிறது. எனவே, சனாதனிகள் மட்டுமே சன்னதியில் தரிசனம் செய்ய இந்த நடவடிக்கை அனுமதிக்கும்" என்றார்.



■ சிவகங்கையில் மாலை தந்தி மற்றும் குற்றமும் பின்னணியும் நாளிதழின் ஆசிரியர் மற்றும் நிறுவனர் டாக்டர். ஆ. பொன்ராஜ் தன்னுடைய வாக்கினை செலுத்தினார்



■ சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக போட்டியிடும் வழக்கறிஞர் குரு முருகனாந்தம் ராஜகம்பீரம், பள்ளியில் நேற்று தனது வாக்கினை பதிவு செய்தார். பொதுமக்களும் ஜனநாயக கடமையை உணர்ந்து வாக்களிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். தேர்தல் நடைபெறும் வாக்குச்சாவடிகளில் அமைதியான சூழல் நிலவிய நிலையில், வாக்காளர்கள் ஆர்வமுடன் வரிசையில் நின்று தங்கள் வாக்குகளை பதிவு செய்தனர்..



■ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வட்டம் அகரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடியில், மானாமதுரை (தனி) சட்டமன்ற தொகுதிக்கான தமிழக வெற்றி கழக வேட்பாளர் டி. இளங்கோவன் தனது வாக்கினை பதிவு செய்தார். தேர்தல் நடைபெற்று வரும் நிலையில், நேற்று காலை வாக்குச்சாவடிக்கு வந்த அவர், பொதுமக்களுடன் வரிசையில் நின்று ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.



■ சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக போட்டியிடும் சேது கருணாஸ், சென்னை சாலிகிராமத்தில் உள்ள வாக்குச்சாவடியில் நேற்று தனது குடும்பத்தினருடன் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றினார். வாக்குப்பதிவுக்குப் பிறகு அவர், மக்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவரது வாக்களிப்பு நிகழ்வு ஆதரவாளர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161